பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

31 08 2025        SUNDAY  6 45 AM

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் ,d;W காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. விளையாட்டுச் சாதனங்கள் உற்பத்திக்கான கொள்கைகளை வகுக்க பணிக்குழு அமைக்கப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்

3. விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, கூடுதல் நெல் கொள்முதல் சேமிப்பு கிடங்குகள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் சொத்து வரி மற்றும் மின்கட்டணத்தை குறைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்

5. ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது

>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் ,d;W காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>><<<<

யுக்ரைனில் அமைதி திரும்புவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா முழுஆதரவு அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், யுக்ரைன் அதிபர் திரு வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, தம்முடன் தொலைபேசியில் கலந்துரையாடியதாக குறிப்பிட்டுள்ளார்.

யுக்ரைனில் நிலவும் தற்போதைய சூழல் குறித்தும், இந்தியா - யுக்ரைன் இடையே பரஸ்பரம் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் இருவரும் விவாதித்ததாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

விளையாட்டுச் சாதனங்கள் உற்பத்திக்கான கொள்கைகளை வகுப்பது குறித்த பரிந்துரைகளை வழங்க பணிக்குழு அமைக்கப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், விளையாட்டு சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான திறன் குறித்து புதிய செயல்திட்டத்தை உருவாக்க இதுபோன்ற ஆலோசனைகள் உதவிடும் என்று கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் விளையாட்டுச் சாதனங்கள் உற்பத்தியும் ஒரு அங்கமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள், உலக அளவில் விளையாட்டுச் சாதனங்களின் உற்பத்தியை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>><<<<

நாடாளுமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்களில் பங்கேற்பதை உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் உறுப்பினர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

அரசியல் ஆதாயத்திற்காக இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் உறுப்பினர்கள், அரசியலமைப்புச் சட்டத்திற்கு பதில் சொல்ல வேண்டிய சூழல் ஏற்படும் என்று அவர் கூறினார்.

மசோதாக்கள் விவாதங்கள் இன்றி நிறைவேற்றப்படுவது, எதிர்க்கட்சிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் என்று திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

>>>><<<<

நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ந்துவரும் சூழ்நிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு சதவீதமாக உயர்ந்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் நடவடிக்கை காரணமாக இந்த வளர்ச்சியை எட்ட முடிந்தது என்று பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

எத்தகைய சவாலான சூழல் இருந்தாலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து 6 புள்ளி ஐந்து சதவீதத்திற்கு குறையாமல் இருக்கும் என்று பொருளாதார நிபுணர் டாக்டர். Gowri Ramachandren தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – கௌரி ராமச்சந்திரன் 53 செகண்ட்ஸ்)

>>>><<<<

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்

செங்கல்பட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளின் நலன் கருதி ஆண்டுதோறும் இரண்டு முறை நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு இந்த கொள்முதல் நிலையங்கள் உதவிடும் என்று திரு. தா.மோ. அன்பரசன் கூறினார்.

>>>><<<<

வெளிநாடுகளில் மேற்கொள்ளும் பயணத்தின் மூலம் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் தாம் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் மூலம், 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், ஒரு லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதையும் திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>><<<<<

அமெரிக்காவின் வரி விதிப்பால், உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டு நலனுக்கு எதிராக, அந்நிய நாடுகள் மேற்கொள்ளும் இதுபோன்ற முடிவுகளுக்கு எதிராக, அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழகத்தில் சொத்து வரி மற்றும் மின்கட்டணத்தை குறைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு, மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் இன்று மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நேற்றிரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது

>>>><<<<<

*இருவரிச் செய்திகள்*

ஏமனில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் அந்நாட்டுப் பிரதமர் அகமது அல்-ரஹாவி மற்றும் அமைச்சர்கள் பலர் கொல்லப்பட்டதாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

>>>><<<<<

தாய்லாந்தின் பிரதமராக துணைப் பிரதமர் திரு. Phum Tham Wechayachai நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>><<<<<

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள நூறு சட்டப்பேரவைத் தொகுதிகளில் போலியான மற்றும் சட்டவிரோத வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<<

தலைநகர் தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளில், காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<<

உலக அளவில் காலரா நோய் அதிகரித்து வருவது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்குமாறு உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>><<<<<

பழங்குடியின மொழிகளுக்கான இந்தியாவின் முதலாவது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான மொழிபெயர்ப்பு செயலியை மத்திய அரசு விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

>>>><<<<<

அஸ்ஸாமில் 9 ஆயிரத்து 704 பயனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களை அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஷ்வா சர்மா வழங்கினார்.

>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், இலவுவிளையில் நடைபெற்ற ஓணம் பண்டிகையை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்கள்  பங்கேற்றனர்.

>>>><<<<<

வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உள்ள நீர் நிலைகள், காப்புக் காடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை ட்ரோன் கேமரா மூலம் கண்டறிந்து அகற்ற வனத்துறையினர், இளைஞர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

>>>><<<<<

கரூர் அருகே பழைய பேருந்துகளை உடைக்கும் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்ச ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்தன.

>>>><<<<<

சந்திரகிரகணத்தை ஒட்டி திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வரும் 7ஆம் தேதி, பிற்பகல் 2 மணி வரை மட்டுமே பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனறு கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>><<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

பீகாரின் ராஜ்கீரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<<

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா 99 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கஸகஸ்தானின் Shykent-ல் நடைபெற்ற இப்போட்டியில், 50 தங்கம், 26 வெள்ளி, 23 வெண்கலப்பதக்கங்களை இந்தியா வென்றது.

>>>><<<<<

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை வெண்கலப் பதக்கம் வென்றது.

>>>>END<<<<<